# தென்னாசியவியற் கருத்தரங்குக் கட்டுரைகள்

யாழ்ப்பாண வளாகத்தில் தென்னாசியவியற் கருத்தரங்குகள் பல்வேறு விடையங்களை யொட்டி நடைபெற்று வருகின்றன. இவ்வருடத்தில் இதுவரை நான்கு கருத்தரங்குகள் தமிழ் மொழி மூலமாக நடைபெற்றன. அக்கருத்தரங்குகளிற் படிக்கப்பட்ட கட்டுரைகள் இலக்கியம், மெய்யியல், நூலகவறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்தன. அவற்றின் சுருக்கங்கள் பலருக்கும் பயனுடைத்தாகுமென எண்ணித்தொகுத்து இவ்விதழிலே தரப்படுகின்றன — ஆசிரியர்

## [1.] ஆய்வுக் கட்டுரைப் பொருள் : 1970க்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள்

ஆய்வாளர் : நாகராஜஐயர் சுப்பிரமணியம்,
நூலகம்,
யாழ்ப்பாண வளாகம்.

1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டிறுதிவரை நாவல்கள், குறு நாவல்கள், நெடுங்கதைகள், தொடர்கதைகள், பிறமொழிகளிலிருந்து தமிழாக்கப் பட்ட நாவல்கள் என்ற எல்லா வகையிலுமாக சுமார் எண்பதுக்கு மேற்பட்ட படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

எழுபதுக்குப்பின் நூல்வடிவில் வெளிவந்தவற்றுள் மர்மப் பண்புள்ளனவும், சம்பவச் சுவைநோக்கில் எழுதப்பட்டனவும், வரலாற்றுக் கற்பனைகளும், காதல் தியாகம், ஏக்கம், முதலிய தனிமனித மன உந்தல்களுக்கு வடிவம் தருவனவாகவும் அமைந்த படைப்புக்கள் பெரும்பாலான. இவை இத்தகைய கதைகளுக்கு தமிழ் நாட்டை நாடியிருந்த பெருந்தொகையான வாசகர்களைத் திருப்தி செய்து சுயதேவையைப் பூர்த்தி செய்தன என்பது குறிப்பிடத்தக்கது. வர்த்தக ரீதியில் இவை ஈட்டித் தந்த வெற்றி சமுதாயப் பார்வையுள்ளனவும் மண்வாசனை கமழ்வனவுமான தரமான நாவல்களை வெளியிடுவதற்கேற்ற வகையில் பிரசுரக்களத்தை வலுப் படுத்தியது என்பது கருத்திற் கொள்ளவேண்டிய தொன்றாகும்.

பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவற்றுள் மாண்புமிகு அமைச்சர் டி. பி. இலங்கரத்தினவின் அம்பய ஹலுவ (இணைபிரியாத தோழர்) சிங்கள, தமிழ் இலக்கியப் பரிமாற்றத்திற்குச் சின்னமாக அமைந்ததென்பதை மட்டும் குறிப்பிடலாம். காலஞ்சென்ற செ. கதிர்காமநாதன் தமிழாக்கிய கிருஷ்ணசந்தரின் நான் சாகமாட்டேன் தமிழில் வெளிவந்துள்ள பிறமொழி நாவல்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்வதற்கேற்ற சிறப்புடையது.

### (அ) சமுதாயப்பார்வையுள்ள நாவல்கள் :

இக்காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க தரமுடையனவாக வெளிவந்த சமுதாயப் பார்வையுள்ள நாவல்கள் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளான பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி ஏற்றத்தாழ்வு, வகுப்புவாதம், சமூக உறவுநெறிக

ளின் ஊழல்கள் என்பவற்றைப் பொருளாகவும் பின்னணியாகவும் கொண்டவை. பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பொருளாகக் கொண்டவற்றுள் செ. கணேசலிங்கனின் மண்ணும் மக்களும் தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை இரண்டும் குறிப்பிடத்தக்கவை. கணேசலிங்கன் நிலவுடைமையாளர்களுக்கெதிராக நிலமற்ற விவசாயிகளைப் போர்க்கோலம் பூணத் தூண்டும் வகையில் மண்ணும் மக்களும் நாவலை எழுதினார். விவசாயிகள் சம்பந்தப்பட்ட கதை என்பதால் விவசாயப் பிரதேசங்களான கிளிநொச்சி, வவுனியா இரண்டுக்குமிடைப்பட்ட பகுதியைச் சார்ந்தவையாக அரசங்குடி, பழங்குடியிருப்பு என்னுமிரு கற்பனையூர்களைப் படைத்துக் கதை கூறும் இவர் அவ்வூர்களை இயல்பான பிரதேச மண்வாசனையுடன் படைக்கத் தவறிவிட்டார். வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இனிமேல் நடைபெற வேண்டியதாக அவர் கருதும் விவசாயிகளின் போராட்டத்தை நிகழ்வதாகக் காட்டியுள்ளமை உண்மைத் தன்மைக்கு ஊறுவிளைவித்துள்ளது. பிரசார நோக்கு ஆதிக்கம் பெற்றுள்ளதாலும் தத்துவச் செறிவான உரையாடல்களாலும் கதையின் விறுவிறுப்புக் குறைந்து விடுகின்றது.

மலையகத்தில் அடிப்படையுரிமைகளற்ற நிலையில் வாழும் தோட்டத்தொழிலாளரின் அவலவாழ்க்கையை, ஒரு சம்பளப் போராட்டத்தை மையமாக வைத்துச் சித்தரிக்கும் காலங்கள் சாவதில்லை நாவலில் தொழிலாளரைச் சுரண்டிவாழும் சிங்கள கிளாக்கர்களுக்கெதிராகத் தமிழ்த்தொழிலாளர் போராடி வெல்வதாகக் கதை அமைகின்றது. மலையகத் தொழிலாளரின் எரியும் பிரச்சினைகளுக்கு அழுத்தங்கொடுப்பதற்குப் பதிலாக காதல், வீரம், சோகம் கற்பழிப்பு முதலியவற்றுடன் கூடிய சம்பவச்சுவை பொருந்திய கதையாக இந்நாவல் அமைந்துவிட்டது. தோட்டத் தொழிலாளர் வாழ்க்கையின் இன்னல்களைக் கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை (1964) யோ. பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் (1968) நாவல்களில் யதார்த்தமாகக் கண்ட பிறகு காலங்கள் சாவதில்லை நாவலில் புதிதாகக் குறிப்பிட எதுவுமில்லை.

பொருளாதாரப் பிரச்சினையைப் பொருளாகக் கொண்டெழுதப்பட்ட குறுநாவல்களில் செ. யோகநாதனுடைய இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும் சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகளாகியும் (1968) அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், வசதிகளைப்பெற முடியாமல் தவிக்கும் ஏழமையுடன் வாழ்வோரைக் காட்டி அவர்கள் இயல்பிற்கு மாருக வானத்தை மண்ணிலிருந்து எட்டித் தொடமுயன்று தோல்வியுற்று நிறைவேருத ஆசைகளுடன் அழிவதைக் காட்டுகின்றது. பல்கலைக்கழக மாணவனுன சுமணதாச இந்தவகையில் முயன்று ஒரு கோழையாகத் தற்கொலை செய்து கொள்கிருன். யார்த்த நிலையை உணர்ந்து வசதியற்றவர்களுக்காகப் போராடும் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு உழைப்பதே செயற்பாலது என்பது நாவலின் செய்தி. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிசெய்த காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களிடையே நிலவிய மனநிலையை இந்நாவல் பிரதிபலிக்கின்றது.

செ. யோகநாதனின் இன்னொரு குறுநாவலான தோழமை என்றொரு சொல் யாழ்ப்பாண மீனவக் களத்தினைப் பகைப் புலமாகக் கொண்டது. இங்கு முதலாளி ஒருவர் தொழிலாளர்க்கு இழைக்கும் இன்னல்களைக் காட்டி அவற்றில் ஆரம்பத்தில் முதலாளியின் சார்பாக நின்ற தொனிலாளி ஒருவன் ஒரு கட்டத்தில் தனது வர்க்க உணர்வு கைவரப்பெற்றுத் தொழிலாளர் சார்பிலே போராடத் துணிகிருன். முதலாவது குறுநாவல் தனிமனித ஆசா பாசங்களைக் கைவிட்டு அரசியலி

யக்க ரீதியில் இணைந்து போராட வேண்டுமென்ற உணர்வையும் இரண்டாவது குறுநாவல் வர்க்க உணர்வு கைவரப் பெறவேண்டும் என்பதையும் புலப்படுத்தி நிற்கின்றன.

பொருளாதார ஏற்றத் தாழ்வைப் பொருளாகக் கொண்டு 1970 க்குப்பின் எழுதிய நாவலாசிரியர்கள் சமகாலத்தின் தேசிய ரீதியான பிரச்சினைகளை அணுகியதாகத் தெரியவில்லை. 1970 ல் அமைந்த ஐக்கிய முன்னணி ஆட்சியும் அது படிப்படியாக எடுத்துவந்த பொருளாதார நடவடிக்கைகளும் தேசிய ரீதியாக எத்தகைய சமுக மாற்றங்களை விளைவித்தன என்பதை அவதானித்ததாகத் தெரியவில்லை. கணேசலிங்கன், ஆட்சி தொடங்கிய உடனேயே அவநம்பிக்கை தெரிவித்து எழுதினார். தெளிவத்தை ஜோசப் நிகழ்காலத்திற்கு வரவேயில்லை. யோகநாதன் பொதுவான வர்க்கபோதக் கருத்துக்களுக்கு விளக்கம்தர எழுதினரேயன்றி சம காலத்துடன் ஒட்டிக் காரண காரியத் தொடர்பாக எழுதியதாகத் தெரியவில்லை. அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கடந்த ஆறு ஆண்டுகளில் ஈழத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டனவா? மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக ஏற்றுக் கொண்டால் நாவலாசிரியர்கள் ஏன் அவற்றை அவதானிக்கவில்லை? என்பன போன்ற வினக்களுக்கு விடை ஆராயப்பட வேண்டியது.

ஈழத்துத் தமிழ் மக்களிடையே — சிறப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சார்ந்தவரிடையே நிலவும் முக்கிய சமுகக் குறைபாடான சாதி ஏற்றத்தாழ்வுப் பிரச்சினையைப் பொருளாகக் கொண்டு இக்காலப் பகுதியில் நான்கு நாவல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் கே. டானியல் எழுதிய பஞ்சமர் பஞ்சப்பட்ட மக்களின் வாழ்வைச் சித்தரிக்கும் பேரோவியம் என்று பாராட்டைப் பெற்றது. பஞ்சமரில் தாமும் ஒருவராக நின்று அனுபவத்தின் துணைகொண்டு எழுதியதால் பொருளில் மட்டுமன்றி மொழியிலும், நடையிலும், சுவையிலும் தரமானதாக விளங்கும் இந்நாவலை 'தற்கால ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஒரு கட்டம்' என்றும் 'அறிவையும் அநுபவத்தையும் அரசியலையும் பற்றி நிறையக் கதைத்துக் கொண்டு உயர்சாதியினருக்கு துதிபாடிக் கிடக்கும் கற்றகும்பலை நோக்கி டானியல் விட்டசவால் பொலத் தோன்றுகின்ற'தென்றும் திறனாய்வாளர் கருதுவர்.

(அ) இத்தகைய சிறப்புப் பொருந்திய இந்நாவலில் அடிப்படை அமைப்பான பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு முதன்மை தரப்படவில்லையென்றும்,

(ஆ) நாவலின் இறுதியில் 'வேலுப்பிள்ளைக் கமக்காரனின் பேத்தியும்...' எனவரும் தடித்த எழுத்துப்பகுதி உயர்சாதியினரின் பாலுறவு ஒழுக்கக் கேடுகளை அம்பலப் படுத்துவதே ஆசிரியரது குறிக்கோள் என்று கருதத் தூண்டுகின்றதென்றும்,

(இ) சட்டரீதியான (தேநீர்க்கடைப் பிரவேசத்தில்) அனுமதியில் அதிக நம்பிக்கை வைப்பது போலத் தோன்றுவது பஞ்சமரின் புரட்சிகர உணர்வை மட்டுப்படுத்து கின்றதென்றும் குற்றங்கள் கூறப்படுகின்றன.

தெணியான் எழுதிய விடிவை நோக்கி என்ற நாவல் யாழ்ப்பாணப் பகுதிக் கிராமம் ஒன்றில் தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளுக்குக் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்படும் சிக்கல்களையும் அதில் அவர்களது சமுகத்தவனான ஆசிரியன் எதிர்கொள்ளும் எதிர்ப்புக்களையும், அடையும் முன்னேற்றங்களையும் கூறுகிறது.

'சோக்கன்' எழுதிய சீதா சாதிவிட்டுச் சாதியிலே விவாகம் செய்வதாலும் ஆலயங்களையும், தேனீர்க்கடைகளையும் திறந்து விடுவதனுலும், சமபந்திப் போசனத்தாலும் சாதிப்பிரிவினைக்கு சாவுமணி அடித்துவிட முடியுமா? என்ற பிரச்சினையின் பகைப்புலத்திலே வளர்ந்து செல்வதாக ஆசிரியராற் குறிப்பிடப்பட்டது.

ஒரு சமுகத்தின் விழிப்பையும் மாற்றத்தையும் பேசுகின்றது என்ற குறிப்புடன் நூல் வடிவில் வெளிவந்த செங்கை ஆழியானின் பிரளயம் நாவல் சிரித்திரன் இதழில் மயானபூமி என்ற தலைப்பில் தொடர் கதையாக வெளிவந்தது எனத் தெரிகின்றது. இந்நாவலின் களம் வண்ணுர்பண்ணை. அங்கு சலவைத்தொழிலாளியாகவுள்ள ஒருவரின் குடும்பத்தில் நிகழும் மாற்றத்தை இந்நாவல் பேசுகிறது.

சாதிப் பிரச்சினையைப் பொருளாகக் கொண்ட மேற்படி நான்கு நாவலாசிரியர்களில் டானியல் 1970 க்கு முற்பட்ட காலகட்டத்தையே பிரதிபலிக்கிறுர். தெணியான் பிரச்சினைக்கு அழுத்தம் கொடுக்கத்தவறிவிட்டார். சொக்கன் கருத்து வடிவிலும் உயர்சாதியினரிடையில் அது எழுப்பும் அலைகளைக் காட்டும் வகையிலும் எழுதினார். செங்கை ஆழியான் கோஷங்கள் எழுப்பாமல் நடைபெறும் மாற்றத்தைக் காட்டினுர். 1970 க்கு முன் கொழுந்துவிட்டெரிந்த சாதிப்பிரச்சினை அதன்பின் நீறுபூத்த நெருப்பாகி விட்டதாற்போலும் அப்பிரச்சினைக்கு அழுத்தம் கொடுக்கும் நாவல்கள் வரவில்லை என்று எண்ணத்தோன்றுகின்றது. செங்கையாழியான் இன்றைய காலகட்டத்தைப் பிரதிபலிக்கிறுரா என்பது இன்றைய சமுகப் பின்னணியில் வைத்து ஆராயப்படவேண்டியது.

ஈழத்தில் தமிழர், சிங்களவர் என்ற இரு இனத்தினரிடையிலும் காணப்படும் வகுப்புவாத உணர்வின் பின்னணியில் எழுதப்பட்ட அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயதுவந்துவிட்டது என்ற நாவல் தேசிய ஒருமைப்பாட்டுக்கான யதார்த்த பூர்வமான களத்தை ஏற்படுத்துகின்றதென்ற பாராட்டைப் பெற்றது.

யாழ்ப்பாணப் பகுதிக் கிராமமொன்றின் சமுக உறவு முறைகளிற் காணப்படும் ஒழுக்கங்கள் மனிதப் பண்புகள் என்பனவற்றைக் காட்டுவதாக எழுந்தது ஏ. ரி. நித்தியகீர்த்தியின் மீட்டாத வீணை.

சமுதாயப் பார்வையுடன் எழுதப்பட்ட மேற்படி நாவல்களைப்பற்றித் தொகுத்துக் கூறுவதனுல் பொருளாதாரப் பிரச்சினையைப் பொருளாகக் கொண்ட நாவல்கள் 1970 க்கு பிற்பட்ட சமுதாயத்தைப் பிரதிபலிக்கவில்லை என்றும், சாதி ஏற்றத்தாழ்வைப் பொருளாகக் கொண்ட நாவல்களில் தரமானதான பஞ்சமரும் 1970க்குப் பிந்திய நிலையைக் காட்டவில்லை என்றும் பிரளயம் அமைதியான சமுகமாற்றத்தைக் காட்டுகின்றதென்றும், வகுப்புவாதப் பகைப்புலத்தில் எழுந்த அவர்களுக்கு வயது வந்துவிட்டது, சமுக உறவு ஊழல்களை காட்டும் மீட்டாத வீணை என்பன இன்றைய சமுகத்தை வர்க்கச் சார்பற்ற எழுத்தாளர்களது கண்ணேட்டத்தில் சித்தரிக்கின்றன என்றும் கூறலாம்.

**(ஆ) மண்வாசனை நாவல்கள் :**

அ. பாலமனேகரனின் நிலக்கிளி தமிழ் நாவலிலக்கிய உலகுக்குப் புதியதொரு பிரதேசத்தை அறிமுகம் செய்திருக்கிறது. வவுனியாமாவட்டத்தின் தண்ணிமுறிப்புக் கிராமத்தைக் கொண்டெழுதப்பட்ட இந்நாவல் வன்னிப் பிரதேசத்தின் மண்வாசனைக்கு முதன்மை தந்து அவ்வியற்கையோடு ஒட்டிய கதைப் பொருளையும் பாத்திரங்களையும் படைத்து எழுப்பட்டது.

பாலமனோகரனின் மற்றொரு நாவலான குமாரபுரம் வவுனியா மாவட்டத்தில் தண்ணீரூற்றுக்கு அயலிலுள்ள குமாரபுரம் என்ற கிராமத்தைக் களமாகக் கொண்டது. நிலக்கிளி போல பிரதேசப்பகைப்புலத்திற்கு அதிமுதன்மை தராமல் கதையம்சத்தை முதன்மைப்படுத்தி எழுந்த இந்நாவல் ஒரு பெண் மன உறுதியால் குடும்பமானம் காக்கப்படுவதைக் கதையாகக் கொண்டது. செங்கையாழியான் எழுதிய வாடைக்காற்று நெடுந்தீவுக் கடற்கரையைக் களமாகக் கொண்டது. அப்பிரதேசத்தை சுவைபட சித்தரிக்க முயன்று ஒரு நல்ல காதற் கதையைப் படைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பாஷையூரில் தாமுண்டு தம் தொழிலுண்டு என்று ஒதுங்கி வாழும் மக்கள் பகுதியினர் தங்கள் இயல்பான வாழ்க்கை முறையிலேயே தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கான தங்கள் பங்கைத் தந்து விடுகிறார்கள் என்ற கருத்துடன் அம்மக்களை வைத்து போராளிகள் காத்திருக்கின்றனர் என்ற நாவலை எழுதிய டானியல் கடற்கரைப் பிரதேசத்தின் வாசனையைப் புலப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளார். ஆனால் அந்தக் கருப்பொருள் வர்ணனையினூடாகப் புலப்படுத்தப்படும் கதை நிறைவானதாக அமையவில்லை என்றே திறனாய்வாளர் பலராலும் கருதப்படுகின்றது. ஆசிரியர் சார்ந்துள்ள வர்க்க உணர்வு நாவலில் முனைப்புப் பெறவில்லை என்ற குறையும் கூறப்பட்டுள்ளது. பஞ்சமர் நாவலைவிட இந்நாவலிற்றான் தனது அனுபவ முதிர்ச்சி காணப்படுகிறதென்றும் இயல்பாக பாஷையூரில் வாழும் மக்களைத்தான் கதையிற் கொண்டுவந்திருப்பதாகவும் ஆசிரியர் கூறுகின்றார்.

மண்வாசனை நாவல்களில் நிலக்கிளி 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியை வைத்து எழுதப்பட்டது. குமரபுரமும் ஏறக்குறைய அக்காலப்பகுதிதான். வாடைக்காற்று 1970 க்குமுந்திய காலப்பகுதியைச் சார்ந்தது. போராளிகள் காத்திருக்கின்றனர் 1958-ம் ஆண்டைப் பின் எல்லையாகக்கொண்டுள்ளது. எனவே இந் நாவல்களிலும் 1970 க்குப் பிற்பட்ட அவ்வப் பிரதேச நிலைகளைக் காணமுடியாது. எனவே அண்மைக்கால அரசியல், பொருளாதார மாற்றங்கள் கல்வி, மனோவளர்ச்சி என்பனவற்றைக் கருத்திற் கொண்டு இந்நாவல்களை அணுக முடியாது.

முடிவாக, 1970க்குப்பிற்பட்ட தமிழ் நாவல்கள் பற்றிக் கூறக் கூடிய கருத்துக்கள்,

(அ) பெரும்பாலான நாவல்கள் 1970 க்கு முற்பட்ட காலப்பகுதியையே சித்தரிக்கின்றன·

(ஆ) சமகால அரசியல், பொருளாதாரம், சமுகம், மொழி முதலியவற்றின் அடிப்படையிலான பிரச்சினைகளின் பக்கம் நாவலாசிரியர்களது கவனம் திரும்பவில்லை.

(இ) எழுபதுக்கு முன் சுமார் பத்தாண்டு காலப்பகுதியில் ஈழத்துத் தமிழ் நாவல் துறையில் காணப்பட்ட சமுதாயப் பார்வையின் பரிணாம வளர்ச்சியை எழுபதுக்குப்பின் காணமுடியவில்லை.

(ஈ) ஒரு சில நாவலாசிரியர்களின் (அருள் சுப்பிரமணியம், டானியல், செங்கை ஆழியான், பாலமனோகரன்) எழுத்தாற்றல் மட்டுமே எழுபதுக்குப்பின் ஈழத்துத் தமிழ் நாவல் பற்றிய கருத்துக்கு உருவம் கொடுக்கின்றது.

(உ) பிரதேசங்களை மண்வாசனையுடன் சித்தரிக்கும் நோக்கமும் இதுவரை இலக்கிய முக்கியத்துவம் பெறாத கிராமப்புறங்களை இலக்கியத்துறைக்கு அறிமுகப்படுத்தும் ஆர்வமும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளன.

[2] ஆய்வுக் கட்டுரைப் பொருள் : சைவ சித்தாந்த அறிவுக் கொள்கை - காட்சி

ஆய்வாளர் ; சோ. கிருஷ்ணராசா
மெய்யியல் துறை,
யாழ்ப்பாண வளாகம்.

சைவ சித்தாந்தத்தின் காட்சிக் கொள்கையை ஆராய்வதாயமையும் இவ் வாய்வுரை சிவஞான சித்தியாரில் காணப்படும் 'அளவைப்' பகுதியினை ஆதாரமாகக் கொண்டதாகும்.

தற்கால அறிவாராய்ச்சிக் கொள்கைகள் போலல்லாது சைவசித்தாந்த அறிவுக் கொள்கைபற்றிய ஆய்வில் உளவியற்கருத்துக்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இத்தகையதோர் போக்கு இந்திய மெய்யியல் மரபிற்கேயுரிய ஒரு பொதுப்பண்பாகும். இந்திய உளவியற் கருத்துக்கள் பரிசோதனையை அடிப்படையாகக் கொள்ளாது பெருமளவு அனுமானங்களாகவே இருப்பதனை அவதானிக்கலாம். அவ்வனுமானங்களே அறிவுக் கொள்கைகளுக்கான முற்கற்பிதங்களாகவும் உள.

காட்சியின் மூலமாக தரப்படும் அறிவு எனும்பொழுது அனுபவம் அதனுள் அடங்கியது என்பது பெறப்படும். அனுபவத்தை வகையீடு செய்பவர்கள் (1) புலன் அனுபவம் என்றும் (2) புலன் கடந்த அனுபவம் என்றும் பாகுபடுத்துவர் காலம், வெளி என்ற பதார்த்தங்களுள் அடங்கும் காட்சி புலன் அனுபவம் சார்ந்தது, அவ்வாறு இல்லாதிருப்பவை புலன் கடந்த காட்சிசார்ந்தது என்றும் கூறிக்கொள்ளலாம். ஆனால் முன்னைய காட்சியின் வாய்ப்பினைப் பரிசோதிப்பதற்குப் பௌதிக உலக அடிப்படை இருப்பதுபோல, பின்னயதைப் பரிசோதிக்க எவ்வித அடிப்படைகளும் இல்லை என்ற வலிமையான குற்றச்சாட்டுக் கூறப்படுகின்றது.

அனுபவத்திலிருந்து பெறப்படும் அறிவானது பொதுவாகத் நேர்நிலை அறிவு என்றும், வழிநிலை அறிவு என்றும் பாகுபடுத்தப்படும். நேர்நிலைப் பிரத்தியட்சம் எனப்படும் அதனைப் புலக்காட்சிக்கும் புலனுணர்ச்சிக்கும் சமமாக நியாய வைசேடிகர் ஏற்பர். ஆனால் சைவசித்தாந்திகள் புலக்காட்சியிலிருந்து யோகக்காட்சி ஈறாக காட்சியில் நால்வகைகளை எடுத்துக் காட்டுவர். வேறு அறிவை வேண்டாது நிற்கும் அறிவுஎன பிரத்தியட்சத்திற்கு இலக்கணம் கூறப்படும். பிரத்தியட்சத்தின் முதன்மையான இயல்பு இதனால் எடுத்துக்காட்டப்பட்டது என கிரியண்ணா கருதுவர். "மலை தீயுடைத்து'' என்ற அனுமான வழியிலான முடிவு பிரத்தியட்சத்தையே அடிப்படையாகக் கொண்டது. ஆன்மாவின் அறிவு பெறும் வாயில்களில் ஒன்றான அனுமானம் தனக்கென்ற தனியான இயல்புகளைக் கொண்டுள்ளதாயினும், அதன் ஆரம்பம் புலனுக்கு உடனடியாகத் தரப்பட்டது என்பதிலிருந்தே தொடங்குகின்றது. நியாயக்கொள்கையான மேற்கூறிய கருத்து சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடே.

காட்சியறிவு இந்திரியங்களிற்கும், பொருள்களிற்கும் இடையில் எழும் உறவால் தோன்றுவது. நியாயதரிசனம் அவ் உறவுமுறையை ஆறுவகையினதாக எடுத்துக் காட்டுகிறது. சித்தியார் அளவைப்பாடல்களில் இதுபற்றிய குறிப்புக்கள் எதுவும் காணப்படாதபொழுதும், உரையாசிரியர்களது விளக்கங்களில் (மறைஞான தேசிகர்; சிவாக்கிரகயோகி, திருவிளங்கம்) காணப்படுகின்றது. எனினும் திருவிளங்கம் ஆறுவகைத் தொடர்புகளும் சைவசித்தாந்தத்திற்கு உடன்பாடானவையல்ல என்ற குறிப்பொன்றினைத் தெரிவிக்கின்றார்.

காட்சியின் உள இயலான பண்புபற்றி வாத்சாயனரின் நியாய சூத்திர பாஷ்யம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. அகம் மனதுடன் தொடர்புற மனம் புலன்களுடன் தொடர்புற, புலன்கள் பொருளுடன் தொடர்புறுகின்றன. போதிய ஒளி போன்ற புறப்பொருட்கள் நன்கு அமையின், காட்சி பிறக்கிறது. காட்சிபற்றிய நியாயக்கொள்கையினரின் மேற்கூறிய விளக்கம் சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடானதே. புற உலகுபற்றிய அறிவைமட்டும் பிரத்தியட்சம் குறிப்பிடாது. அகநிலை அனுபவங்களையும் அது உள்ளடக்குகிறது. குறிப்பாக தன்வேதனைக்காட்சியினது ஆரம்பம் புற உலகின் தொடர்பினை வேண்டி நிற்பினும், அகநிலை அனுபவங்களுடன் தொடர்புடையது என்பதை அவதானிக்கலாம். இன்பம், துன்பம் என்பவற்றை நுகர்வதற்குக் கருவியாக அமைவது மனம். தன்வேதனைக்காட்சி தன்னியல்பில் அப்பண்புகளைக் கொண்டுள்ளதாதலால் பிரத்தியட்சத்தின் முடிவெல்லையாக அமைகின்றது.

காட்சி பல பகுதிகளைக் கொண்டது. எனவே இது வரையறைக்குட்பட்டது: இது சவிகற்பம் எனப்படும். எவ்வகையிலும் பண்புகளைப் பெறாத தனிப்பட்ட பொருளைத் தருவதானதன்மையுடையது நிர்விகற்பக்காட்சி. அதாவது கருத்தேற்றம் பெறுக்காட்சி என வரையறுக்கப்படும். இந்நிலையில் பொருளின் உண்மை மாத்திரம் உணரப்படுகின்றது. உற்று நோக்குவதற்குப் பொருளாகவும் அகக்காட்சிக்குத் தரப்பெறும் முற்கூற்றுக்களாகவும் நிர்விகற்பக் காட்சி அமைகின்றது. இவ்விதமான பண்புக் கூறுகளையும் பெறாத நிர்விகற்பக்காட்சி அகத்தினை அடைவதினால் சவிகற்பக் காட்சியாகின்றது. சிவஞானசித்தியார் நிர்விகற்பக் காட்சியையும் சவிகற்பக் காட்சியினையும் இருவேறு பிரிவுகளாக எடுத்துக் காட்டுகின்றது. பொருளது வரையறுக்கப் படாப் பண்புகளை அறியும் நிர்விகற்பக் காட்சியே சித்தியார் கூறும் நால்வகைக் காட்சிகளில் முதல் நிலையான இந்திரியக் காட்சியாகும். நிர்விகற்பக் காட்சியில் உளத்தின் தொடர்பு ஏற்படுவதன் மூலம் சவிகற்பக்காட்சி பெறப்படுகின்றது. சவிகற்பக் காட்சி இருநிலைகளைக்கொண்டது. அவை முறையே மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி என்பனவாகும்.

வாயிற்காட்சி. மானதக்காட்சி என்ற இரண்டும் இருவேறுபட்ட காட்சியின் வகைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை உண்மையில் இரு காட்சி வகைகள் அல்ல. காட்சியின் இரு நிலைகளே. அடிப்படையில் புறவயமான பொருள் அல்லது நிகழ்ச்சி என்பதை இலக்காகக்கொண்டது என்ற பொதுப்பண்பை உள்ளடக்கியது. இவ்வடிப்படையே வாயிற்காட்சியையும், மானதக்காட்சியையும் காட்சியின் இரு நிலைகளாகக் கொள்ளுதல் வேண்டும் என்ற எனது கருத்திற்கு ஆதாரமாகும். கூடிய அளவிற்குத் தன்வேதனைக்காட்சியும், யோகக்காட்சியும் அகவய இயல்பைக் கொண்டிருப்பதால், முன்னைய இரு காட்சி நிலைகளிலிருந்து வேறுபட்டதாகக் கருதப்படுகின்றன. சிவாக்கிரயோகியார் கருத்துப்படி ஆன்மா பெறும் இன்பதுன்ப அனுபவங்கள் தன்வேதனைக்காட்சியால் அறியப்படுகின்றது. திருவிளங்கம் மேற்படி கருத்தினை விரித்துப் பின்வருமாறு கூறுகின்றார். ''புத்தி தத்துவத்திற் சவிகற்பமாய்ப் பொருந்திய மானதக் காட்சியுணர்வு முக்குணங்களுக்குள்ளே சாத்துவிக குணத்தொடு கூடுதலால் இன்பமாகவும் தமோ குணத்தொடு கூடுதலால் துன்பமாகவும் தோன்றும். அவ்வின்ப துன்ப உணர்வைப் புருடன் அனுபவிக்கும்படி கலை, காலம், நியதி, வித்தை, அராகம் எனும் ஐந்து தத்துவங்களுடனும் பொருந்தும். பொருந்திய அவ்வின்ப துன்பங்களைப் புருடனது அறிவு அறிவது தன்வேதனைக்காட்சியாகும்.'' எனவே திருவிளங்கத்தினது உரையை, குறிப்பிட்ட சித்தியார் பாடலுக்கான பொருத்

தமான விளக்கமாக ஏற்றுக்கொண்டால் பிரத்தியட்ச நிலைகளில் இறுதிநிலையாக உளதே தன்வேதனைக்காட்சி என்ற முடிவு பெறப்படும். எனவே இதுவரை கூறியவற்றிலிருந்து சைவ சித்தாந்தப் பிரத்தியட்ச கொள்கை மூன்று நிலைகளை உள்ளடக்கியது என்றும், முறையே முதலாவது நிலையாக இந்திரியக்காட்சி உளது என்றும் இரண்டாவது நிலையாக உளது மானதக்காட்சி என்றும், யோகக்காட்சி மூன்றாவது நிலையாகும் என்றும் ஒரு முடிவிற்கு வரலாம்.

யோகக்காட்சி மேற்கூறிய மூவகைக் காட்சி நிலைகளினின்றும் வேறுபட்ட ஒன்றாக உளது. காலம், வெளி என்ற பதார்த்தங்களுள் அடங்குவதாக முற்கூறிய காட்சி நிலைகள் இருக்க யோகக்காட்சி அவற்றிற்கப்பாற்பட்டதாக இருக்கின்றது.

இதுவரை வாய்ப்பான அறிவியற் காட்சிபற்றிக் கவனம் செலுத்திய நாம் இனி வாய்ப்பற்றஅறிவு பற்றி ஆராய்வோம்.

தவறான காட்சி அல்லது வாய்ப்பற்றஅறிவு இரு விதங்களில் ஏற்படலாம்; என சித்தியார் கூறுகின்றது. அவை முறையே ஐயம், திரிபு என்பனவாகும். உரையாசிரியர்கள் ஐயத்தினை விளக்குவதற்குக் 'குற்றியோமகனோ' என்ற உதாரணத்தினைத் தருகின்றனர். மனிதனோ, மரமோ என அறியாது ஏதோ ஒன்று உள்ளது என அறியும்நிலை ஐயம் ஆகும். இரு பொருள்களிற்கிடையிலான பொதுப்பண்புகளே ஐயக்காட்சிக்குக் காரணமாகின்றன. கடந்தகால அனுபவங்கள் அல்லது ஞாபகம் அதனுடன் இணைந்துள்ளது. எனினும் ஐயநிலையில் இருபொருட்களிற்கிடையிலான (1) தடுமாற்ற நிலையும் (2) தனிப்பண்புகள் இடம் பெறு நிலையும் (3) பொருளிலிருந்து தரப்பட்டது, சிறிதளவும் எம்மால் ஊகிக்கப்பட்டது, சிறிதளவும், ஆன மூன்று சிக்கலான செயல்முறைகளும் கலப்பும் காட்சியில் இடம் பெறுகின்றன.

விகற்பக்காட்சியின் இன்னொருவகை திரிபுக்காட்சி எனச் சித்தியார் குறிப்பிடுகின்றது. இதனை விளக்க உரையாசிரியர்கள் 'கயிற்றைப் பாம்பாகக் காணுதல்' என்ற உதாரணத்தைத் தருகின்றனர். இந்திய தரிசனங்கள் திரிபுக் காட்சியைக் கூடுதலாக உளவியலடிப்படையிலேயே ஆராய்ந்தனர். அறிவியல் விழுமியங்களின் கட்டுப்பாடு உள்பொருளியல் அடிப்படை என்பவற்றுடன் இணைத்தே திரிபுக்காட்சியின் விளக்கம் அவர்களால் தரப்படுகின்றது. சித்தியாரும் அதன் உரையாசிரியர்களும் புலன்கள் அனைத்திலும் திரிபுக்காட்சி எவ்வாறு எழலாம் என்ற ஆய்வு செய்யவில்லை. உட்பொருளை இன்னொன்றாகக் காண்பது திரிபு என்று கட்புலனில் எழும் திரிபுக்காட்சி நிலைபற்றிமட்டுமே ஆராயப்படுகின்றது.

தவறான காட்சி ஏற்படும் இன்னொரு சந்தர்ப்பம் 'பிரத்தியட்சப்போலி' என அழைக்கப்படும். சித்தியார் (அளவைப்) பாடல்களிலோ, அதற்குரிய உரையாசிரியர் குறிப்புக்களிலோ அதுபற்றி எதுவும் கூறப்படவில்லை. 'சைவப்பிரகாசனம்' என்ற நூலில் சங்கர பண்டிதர் சில குறிப்புக்களைமட்டும் தந்துள்ளார். அவரது கருத்துப்படி பிரத்தியட்சப்போலி என்பது பித்தம், படலம், தூரம், இருள் முதலிய குற்றங்களோடு கூடிய இந்திரியத்தினால் ஏற்படுவது.

13] ஆய்வுக் கட்டுரைப்பொருள் : பிரதேச நாவல்கள் — யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள்,

ஆய்வாளர் : துரை மனோகரன்
தமிழ்த்துறை
யாழ்ப்பாண வளாகம்

மண்வாசனையை அடிப்படையாகக் கொண்டு பிரதேச நாவல்கள் எழுதப்படுகின்றன. பிராந்திய நாவல்கள், வட்டார நாவல்கள் மண்வாசனை நாவல்கள் என்ற பெயர்களாலும் இவ்வகை நாவல்கள் அழைக்கப்படுகின்றன. இந்நாவல்களில், குறிப்பிட்ட கதைக் கருவுக்குரிய களமாகிய நிலத்தோற்றம் அப்பிரதேசத்துக்குரிய மொழிவழக்கு, பழக்கவழக்கங்கள் ஆகியவைகள் முதன்மை பெறுகின்றன.

பிரதேச நாவல்களை எழுதுவோர் எந்தவொரு மொழியிலும் மிகக் குறைவானவர்களாகவே உள்ளனர். ஏனெனில், பிரதேச நாவல்களை எழுதுவதற்கு மிகுந்த உழைப்பும், மானிடவியல் அறிவும் அவசியமாகின்றன. மேலைநாட்டில் சிறந்த பிரதேச நாவலாசிரியர்களாக வில்லியம் ஃபோக்னரையும், தோமஸ் ஹார்டியையும் குறிப்பிடுவர். தமிழ்நாட்டில் பிரதேச நாவல்களின் மூலபிதாக்களாக கே. எஸ். வேங்கடரமணி (முருகன் ஓர் உழவன்); சண்முகசுந்தரம் (நாகம்மாள்) சங்கரராம் (மண்ணாசை) என்போரைக் குறிப்பிடுவர்.

இலங்கைத் தமிழ்நாவல்களைப் பொறுத்தவரையில், இலங்கையை—குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட முதல்நாவல் வீரசிங்கன்கதை (1908) என்பதாகும். இதில் கதை நிகழிடங்களாக மட்டுமே யாழ்ப்பாணம் முதலிய இடங்கள் இடம்பெற்றன. நொறுங்குண்ட இதயம் (1914) நாவல் தெல்லிப்பழையைக் களமாகக் கொண்டது. இவைபோன்ற சில நாவல்களின் பின், அ. செ. முருகானந்தம் யாழ்ப்பாணப் பிரதேச மண்வாசனையிலும், வ. அ. இராசரத்தினம் கிழக்கிலங்கைப் பிரதேச மண்வாசனையிலும் நாவல்களை எழுதியுள்ளனர்.

1956-ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட புதிய, தேசிய, சமுதாய விழிப்புணர்வின் காரணமாகவும், அதன் தர்க்கரீதியான வளர்ச்சியின் காரணமாகவும், 1960களில் இலங்கைத் தமிழ் எழுத்தாளரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளில், மண்வாசனை, இழிசினர் வழக்கு இலக்கியம் என்ற சொற்பிரயோகங்கள் தாராளமாகப் பரிமாறப்பட்டன. 'இழிசினர் வழக்கு' என்று பண்டிதமரபினராற் பரிகாசஞ் செய்யப்பட்ட பேச்சு மொழியைத் தன்னம்பிக்கையுடன் கையாண்டு, செ. கணேசலிங்கன் தமது நீண்டபயணம் (1965) நாவலின் மூலம் கோடி காட்டியுள்ளார்.

செ. கணேசலிங்கனின் நீண்டபயணம் நாவலில், பிரதேசவாரியான மாந்தரின் பாரம்பரியங்கள் அடக்குவோரின் கொடூரங்கள், அடக்கப்படுவோரின் இன்னல்கள், அவர்களது போராட்டங்கள், முன்னேற்றங்கள் என்பன கூறப்பட்டுள்ளன. அவரது சடங்கு நாவல் யாழ்ப்பாணத்துத் திருமணம், மரணம் முதலிய சடங்கு சம்பிரதாயங்களின்போலித்தன்மைகளையும், அவற்றுக்குப் பின்னே மறைந்து கிடக்கும் மனித இதயங்களின் ஏக்கங்களையும், சித்திரிக்கிறது. போர்க்கோலம் நாவலில் யாழ்ப்பாணச் சாதியமைப்பைப் பின்னணியாகக் கொண்டு வர்க்கப் போருக்கான பாத்திரங்களை ஆசிரியர் படைத்துள்ளார்.

எஸ். பொன்னுத்துரையின் சடங்கு நாவல் சில நாட்களுக்குள் நடைபெறும் நிகழ்ச்சிகள் மூலமாக, யாழ்ப்பாண நடுத்தர மனப்பாங்கைச் சித்திரிக்கிறது.

கே. டானியலின் பஞ்சமர் நாவல் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற சாதிக் கொடுமை, ஒடுக்கப்பட்ட பஞ்சப்பட்ட மக்களின் வாழ்வு அவர்களது போராட்டம் முதலியவற்றைக் காட்டுகின்றது. அவரது போராளிகள் காத்திருக்கின்றனர் நாவல், பாஷையூர் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு, அப்பகுதிக் கடற்றொழிலாளரின் வாழ்க்கையையும் போராட்ட உணர்வுகளையும் சித்திரிக்கிறது.

செங்கை ஆழியானின் முற்றத்து ஒற்றைப்பனை வண்ணார்பண்ணையைக் களமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தவர் சிலரின் கிணற்றுத்தவளை மனோபாவத்தை விளக்குகிறது. அவரது வாடைக்காற்று நெடுந்தீவுக் கடலோரப் பகுதியைப் பகைப்புலமாகக் கொண்டு, காதல், தியாகம், ஏக்கம் முதலிய சம்பவங்களைச் சித்திரிக்கிறது. இவ்வாசிரியரது பிரளயம் நாவல் முன்னேறத் துடிக்கும் யாழ்ப்பாணப் பிரதேசச் சலவைத் தொழிலாளியின் குடும்பத்தில் நிகழும் பிரச்சினைகளைக் காட்டுகிறது.

ஏ. ரி. நித்தியகீர்த்தியின் மீட்டாதவீணை பருத்தித்துறைப் பகுதியைக் களமாகக் கொண்டு சமூக உறவுகளுக்கும் மனிதாபிமானத்துக்குமிடையே நிகழும் முரண்பாடுகளைச் சித்தரிக்கிறது.

இக்கட்டுரையில் ஆராயப்பட்ட மேற்படி யாழ்ப்பாணப் பிரதேச நாவல்களைப் பொதுவாக நோக்கும்பொழுது, சில முக்கிய குறைபாடுகள் தென்படுகின்றன. பொதுவாக எல்லா நாவலாசிரியர்களும் உரையாடல்களை அமைக்கும்போது தவறுகின்றனர். செ. கணேசலிங்கன் தமது நாவல்களின் பொருளிலும், அமைப்பிலும் செலுத்தும் கவனத்தைப் பாத்திரங்களின் உரையாடல்களிற் செலவிடத் தவறிவிட்டார். எஸ். பொன்னுத்துரையும் சில இடங்களில் உரையாடலிற் பிரதேச வழக்கைக் கையாள்வதிற் கவனக் குறைவாக இருந்துவிடுகிறார். செங்கை ஆழியானுக்கு நெடுந்திவு மக்களின் பேச்சுமொழி நன்கு கைவரவில்லை. கே. டானியல் மட்டுமே ஓரளவு ஆற்றலுள்ள பிரதேச வழக்கைக் கையாண்டுள்ளார். கதையம்சத்தில் வாடைக்காற்று, போராளிகள் காத்திருக்கின்றனர் ஆகியவை சோடைபோய் விட்டன. மீட்டாதவீணையின் கதையம்சத்தில் பலவீனம் உண்டு.

பிரதேசநாவல் என்றால், குறிப்பிட்ட பிரதேசத்துப் பேச்சு மொழியைக் கையாள்வதோ, அந்த இடத்தைப் பூகோளரீதியாக வர்ணித்துவிடுவதோ அல்லவென்றும், ஓர் இடத்து மண்ணுக்குரிய தனித்துவ சுபாவம் காற்றாக எங்கும் பரவியிருக்கவேண்டும் என்றும் சி. சு. செல்லப்பா கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழ்ப் பிரதேச நாவல்கள் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள் — சிறந்து விளங்குவதற்கு இன்னும் எவ்வளவோ முயற்சியும் ஆற்றலும் வேண்டும்.